**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.02.2026**
**OS. No. 194/2013**
**வழக்கு சாட்சி PW.1–பழனி , த/பெ.குப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2, 3, 5 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>2, 3, 5 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என்னை சாட்சியம் அளிக்க 3ம் வாதி ஆறுமுகம் அழைத்து வந்தார். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடைய வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் சுமார் 6, 7 கி.மீ இருக்கும். வாதிகளும், பிரதிவாதிகளும் எனக்கு மாமன் முறை ஆவார்கள். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் சிந்தாமணியூரில் உள்ளது. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தடம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த தடம் எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டதுஎ ன்றால் மந்திரி (எ) காவேரிக்கு பாத்தியப்பட்டதாகும்.

2) வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தாத்தா தான் மேற்கண்ட மந்திரி (எ) காவேரி ஆவார். ஆதியில் மந்திரி (எ) காவேரிக்கு எவ்வளவு விஸ்தீரணம், எந்தெந்த சர்வே எண்ணில் சொத்து இருந்தது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பதிலுரையில் அவர்களது தாத்தாவான மந்திரி (எ) காவேரி 1957 ல் தாவா சொத்தை கிரையம் பெற்று அதை முறைபடி யாருக்கும் பாகம் பிரித்து கொடுக்காமல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு அவரது பிள்ளைகளான சித்தன், சின்னபையன், அம்மாசி ஆகியோர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்கள் பிரித்து கொண்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி அம்மாசி ச.எண்.248/1B ல் 74 சென்ட் நிலமும், சின்னபையனுக்கு ச.எண்.248/1A1 ல் 74 சென்ட் நிலமும், சித்தனுக்கு ச.எண்.248/1A2 ல் 74 சென்ட் நிலமும் பாகம் பிரிக்கப்பட்டு அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3) சிந்தாமணியூர் செல்லும் தார் சாலையானது தென்வடலாக செல்லும் சாலை என்றால் சரிதான். மேற்படி அம்மாசி, சின்னபையன், சித்தன் ஆகியோர்களுக்கு பிரித்து கொடுத்த நிலங்கள் ஒன்றுக்கொன்று பக்கத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அவர்கள் மூவரும் சேர்ந்து 1987 ம் வருடம் சிந்தாமணியூர் தார்சாலைக்கும், பூர்வீக சொத்திற்கும் இடையே ச.எண்.248/1A3 ல் 2.13 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதில் அம்மாசிக்கும், சின்னபையனுக்கும் தலா 53–1/4 சென்ட் நிலம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றும், சித்தனுக்கு 1.6–1/2 ஏக்கர் நிலம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் நிலம் பிரித்து அனுபவத்தில் உள்ளார்கள், எவ்வளவு பிரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவரவர்கள் பாகம் பிரித்து வழங்கப்பட்ட நிலத்தில் தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4) சிந்தாமணியூர் தார் சாலையிலிருந்து அவரவர்களுக்கு பாகம் பிரித்த நிலங்களின் வழியாகத்தான் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நீதிமன்ற ஆணையர் தடத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது எ ந்த சர்வே எண்ணில் செல்கிறது என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா தடத்தை அளக்க வந்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். அது எந்த தேதியில் என்றால் அது எனக்கு தெரியவில்லை. வாதிகள் வழக்கு தாக்கல் செய்த பிறகு அம்மாசியின் வாரிசுகள் வாதிகள் மீது தனியாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) அந்த வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, சொத்துக்களை அளந்து பார்க்க வந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் வாதிகள் சொல்வது போல் தடம் எதுவும் இல்லை என்றும், கல்கரை மட்டும் தான் உள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 10 அடி அகல வண்டிப்பாதை எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த

வண்டிப்பாதை 3 அடியாக குறுகியது எந்த சர்வே எண்ணில் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நிலத்தில் எவ்வித தடவழியோ, வண்டிப்பாதையோ இல்லை என்றும், சிந்தாமணியூர் தார்சாலையிலிருந்து அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கு சென்று வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகளுக்கு எவ்வித தடவழியும் இல்லை என்றும், வாதி ஆறுமுகம் என் அக்காவின் கணவர் என்பதால் நான் எவ்வித விவமும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாகவே தடவழி இருந்திருந்தால் எந்தெந்த சர்வே எண்ணில் செல்கிறது என்ற விவரம் சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.